# தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் விருதுகள் 2022

தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் கல்விமற்றும்விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சிப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு சிறப்பாகப் பணியாற்றி வரும் கல்வி நிறுவனங்கள், தனிநபர், தன்னார்வ தொண்டு நிறுவன'ங்களுக்கு 2022-ஆம் ஆண்டின் 'சுற்றுச்சூழல் விருதுகள்' வழங்கி கௌரவிப்பதற்குத் தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது.

| **விருதுகளின்விவரம்** | **தகுதியுடைய நபர்கள்** |
|---|---|
| 1) சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு.<br>• முதல் பரிசு –ரூ. 15,000/-<br>• இரண்டாம் பரிசு –ரூ.10,000/-<br>• மூன்றாம் பரிசு– ரூ.7,500/- | சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் கல்வி நிறுவனங்கள் / கல்வியாளர்கள் / தனிநபர்கள். |
| 2) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை - **தனிநபர்**<br>• முதல் பரிசு – ரூ.15,000/-<br>• இரண்டாம் பரிசு – ரூ.10,000/-<br>• மூன்றாம் பரிசு – ரூ.7,500/- | அ) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை பணிகளில் சிறந்து விளங்கும் தனிநபர்கள். |
| 3) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை - **நிறுவனம்**<br>1) முதல் பரிசு – ரூ.15,000/-<br>2) இரண்டாம் பரிசு – ரூ.10,000/-<br>3) மூன்றாம் பரிசு – ரூ.7,500/- | ஆ) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை பணிகளில் சிறந்து விளங்கும் நிறுவனங்கள். |
| 4) சுற்றுச்சூழல் ஆராய்ச்சி கட்டுரை<br>• பரிசுத் தொகை – ரூ.15,000/- | சுற்றுச்சூழலின் சிறந்த மேலாண்மைக்கு வித்திடும் ஆராய்ச்சியாளர்கள் / ஆராய்ச்சி நிறுவனங்கள். |
| **மொத்தமதிப்புத்தொகை** | **ரூ.1,12,500/-** |

**<u>அனைத்து விண்ணப்பதாரர்களும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்:-</u>**

1) விண்ணப்பதாரர் தனிநபராக இருப்பின் 18 வயது நிரம்பியவராக இருக்கவேண்டும்.
2) சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் கல்வி பிரிவில் தனிநபர் மற்றும் நிறுவனங்கள் தங்களது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

3) சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் கல்வி பிரிவின் கீழ் கடந்த ஆண்டு 01.01.2022 முதல் 31.12.2022 வரை உள்ள தகுதிக் காலத்திற்குள் தனிநபர் / நிறுவனம் செய்தபணிகள் மட்டுமே விண்ணப்பத்தில் இடம்பெற வேண்டும். தனிநபராக இருப்பின் தமிழக அரசால் வேறு எந்த விருதுகளக்கும் அனுப்பப்படாத பணிகளின் விவரம், அவற்றின் பயன் மற்றும் விவரங்களை அறிக்கையுடன் இணைத்தல் வேண்டும்.
4) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை பிரிவில் விண்ணப்பிக்கக்கூடிய தனிநபர் / நிறுவனம் அறிவிக்கையில் குறிப்பிட்ட 01.01.2022 முதல் 31.12.2022 வரை உள்ள கால கட்டத்தில் மேற்கொண்ட களப்பணி மற்றும் அதைச்சார்ந்த பிரசுர'ங்கள், பத்திரிக்கை குறிப்புகள், திட்ட அறிக்கைகள், அதனால் ஏற்பட்ட பயன்பாடு, பயனாளிகள் / பங்கு பெற்றோர் எண்ணிக்கை குறித்த தகவல்கள் இடம்பெற வேண்டும்.
5) மேற்கொண்ட களப்பணியை சம்பந்தப்பட்ட துறையின் அதிகாரிகள் / தேர்வுக்குழுவினர் ஆய்வு செய்வார்கள்.
6) ஏதேனும் ஒரு பிரிவில் மட்டுமே தனிநபர் / நிறுவனம் விண்ணப்பிக்கலாம்.
7) மேற்கண்ட நான்கு பிரிவிற்கும் அப்பிரிவின் எதிரே குறிப்பிட்டுள்ள தகுதியுள்ள தமிழ்நாட்டைச் சார்ந்தநபர்கள் / நிறுவனங்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
8) மேற்கண்ட நான்கு பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிற்கும் உள்ள தனித்தனி விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்பவேண்டும்.
9) ஏற்கனவே சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையால் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்ட நபர்கள் / நிறுவனங்கள் மீண்டும் விருதுகள் பெற விண்ணப்பிக்க இயலாது.

**<u>சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கான தனி விதிகள்:-</u>**

1) சிறந்த சுற்றுச்சூழல் ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஊக்குவிக்கும் வண்ணம் 2022-ம் ஆண்டு ஜனவரி 2022 முதல் டிசம்பர் 2022-ம் வரை வெளியான, தனிநபர் அல்லது ஒன்றிற்கு மேற்ப்பட்டோர் இணைந்து உருவாக்கிய, சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கு ரொக்கப்பரிசு, பாராட்டு மடலும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2) ஆராய்ச்சிக் கட்டுரைகள் தமிழிலும் / ஆங்கிலத்திலும் தரமான ஆராய்ச்சி ஏடுகளில் பிரசுரிக்கப்பட்டவைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
3) ஆங்கில கட்டுரையானால் ஆராய்ச்சி கட்டுரையின் தமிழ் மொழிபெயர்ப்பு இணைக்கப்பட வேண்டும்.

4) இதற்கு ஆதாரமாக எந்த ஆராய்ச்சி / அறிவியல் ஏடுகளில் பிரசுரிக்கப்பட்டது என்று விவரம் அளித்தல் வேண்டும்.
5) இந்த அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் பிரசுரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
6) ஆராய்ச்சி கட்டுரை பிரிவின் கீழ் சம்பந்தப்பட்ட தலைப்பில் புத்தகமாக வெளியிடப்பட்டிருப்பின் (தமிழிலும் / ஆங்கிலத்திலும்), அந்தபுத்தகம் முழுமையாக இணைத்தல் வேண்டும்.
7) ஆராய்ச்சி கட்டுரை மற்றும் புத்தகம் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் சேர்ந்து பிரசுரம் செய்திருந்தால், முதல் நபர் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவர்.
8) ஆராய்ச்சிக் கட்டுரையின் ஆறு நகல்கள் அனுப்பப்பட வேண்டும்.
9) ஏற்கனவே விருது பெற்ற தனிநபர் / ஒன்றிற்கு மேற்பட்டோர் மீண்டும் விருது பெற விண்ணப்பிக்க இயலாது.

**<u>விண்ணப்பிக்கும் முறை:-</u>**

1. விண்ணப்பத்துடன் செயலாக்கத்தினை உறுதிபடுத்தும் வகையில், பிரசுரச்சீட்டுகள், ஊர்வலங்கள் மற்றம் நிழற்படங்கள் / மற்ற அவசிய ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்.
2. விண்ணப்பங்கள் மற்றும் அதன் இணைப்புகள் நூலால் உறுதியாக தைக்க பட்டிருக்கவேண்டும், ஸ்டேப்ளர்பின் கொண்டு இணைக்கப் படக்கூடாது.
3. இணைக்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை விண்ணப்பத்தில் குறிப்பிடவேண்டும்.
4. இவ்விருதுக்குரிய விண்ணப்பப் படிவங்களை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநரக வளையதளத்தில் (www.environment.tn.nic.in) இருந்து **<u>15.08.2023</u>** வரை பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம்.

   வலைதள முகவரி - www.environment.tn.nic.in

   தொலைபேசி எண் – 2433 6421

   விண்ணப்பங்கள் பதிவிறக்கம் செய்யும் கடைசி நாள் – **15.08.2023**

   பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் -**21.08.2023**
5. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் ஆறு நகல்களில் ’இயக்குநர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை’ (Director, Department of

Environment and Climate Change) என்ற பெயரில் ரூ.100/- க்கான கேட்புக் காசோலையுடன் மூன்று புகைப்படங்களையும் (Passport size photos) இணைத்து அனுப்பவேண்டும்.

6. இயக்குநர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை, தரை தளம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015 என்ற முகவரிக்கு 21**.08.2023** அன்று மாலை 5.00 மணிக்குள்ளாக தபால் மூலம் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறவேண்டும். காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்படாது.

ஒம்./. தீபக் எஸ். பில்கி,
இயக்குநர், சுற்றுச்சூழல் மற்றும்
காலநிலை மாற்றத்துறை

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை
மாற்றத்துறை இயக்குநருக்காக